20.11.2020
அசல் வழக்கு எண்: 125-2013

பி.வா.சா.2 ராமச்சந்திரன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் சர்வே எண்.42/1 என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 32 செண்டு என்றால் சரிதான். 4 ஏக்கர் 32 செண்டும் ஆதியில் சின்னத்தாய்க்கு பாத்தியப்பட்டது. எதிர் வழக்குரைக்குரிய விபரங்களை எனது வழக்கறிஞரிடம் எனது தாயார் சொன்னார். எனது தாயார் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை. மேலக்கோட்டை கிராமத்தை சேர்ந்த முத்துகூடகவுண்டர் மகன் ராமச்சந்திர மூர்த்தி என்ற நபர்தான் நான் என்றால் சரிதான். எனது பாட்டி சின்னத்தாய் இறந்து 30 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. நானும், 1,3 பிரதிவாதிகளும் வழக்கில் ஆஜராக சேர்ந்துதான் வக்காலத்து தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வக்காலத்தில் எனது தாயார் கையொப்பத்திற்கு கீழ் நான் கையெழுத்து செய்துள்ளேன் எனறால் சரிதான். **எங்களது சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்தில் உள்ள எனது கையெழுத்து மட்டும் வா.சா.ஆ.10.** வா.சா.ஆ.10ல் உள்ள கையெழுத்தும், 17.02.2004ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்று என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதானா என்றால் சரிதான். ஏற்கனவே எனது கையெழுத்து சிறியதாகவும், தற்போது எனது முழு பெயரையும் கையெழுத்து இடுகிறேன். எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் 3 நபர்கள். எனது தகப்பனார், எனது தகப்பனாரின் சகோதரி செல்லம்மாள், மற்றொரு சகோதரர் குபேந்திரன். செல்லம்மாளின் கணவர் பெயர் அழகு பாண்டி கவுண்டர் என்றால் இருக்கலாம். எனக்கு தற்போது 50 வயது. நான் திருப்பூரில் தனியார் கம்பெனியில் சுமார் 17 வருடங்களாக வேலை பார்க்கிறேன். 2005,2006ம் வருடம் திருப்பூர் சென்றிருப்பேனா என்றால் வருடம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 2004ம் வருடம் நான்

ஊரில் இருந்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான்திருப்பூரில் வேலை பார்த்து வருவதற்கு ஏதேனும் ஆவணம் உண்டா என்றால் இல்லை. 2004ம் வருடம் நான் ஊரில் இருந்தேன் என்றால் இருக்கலாம் இல்லாமல் இருந்திருக்கலாம். நான் திருப்பூர் சென்று பல வருடங்கள் ஆகி விட்டது. 2004ம் வருடம் நான் ஊரில் தான் இருந்தேன் என்று வழக்கிற்காக மாறி மாறி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோள்படி மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).